**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 3, Issue - 1, November 2023 E-ISSN: 2583-0481

# Culture in Aatrupadai Literature

**S. Vennila,** Research Scholar & Assistant Professor, Center for Tamil Studies,
A. Veeraiya Vandayar Memorial Sri Pushpam College, Thanjavur, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-1658-7282
**Dr. N. Sivajikapilan**, Head & Associate Professor, Center for Tamil Studies,
A. Veeraiya Vandayar Memorial Sri Pushpam College, Thanjavur, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-8818-6038
**DOI: 10.5281/zenodo.10389576**
**Received:** 17 July 2023; **Revised:** 21 August 2023; **Accepted:** 29 August 2023; **Available online:** 26 November 2023.

## Abstract

*The Tamil language has rich moral texts which are not found in other languages in the world. It is special to acquire grammatical and literary resources to such a scholarly extent that it is impossible to say with certainty the ancient period of the Tamil language. The Tamil language excels as an unrivalled language in all aspects of culture and art. Man is a part of society. Therefore, the language he speaks, food, dress, lifestyle, work and thoughts reveal the culture of the society he lives in. Every human society has a culture and it reflects their heritage. The habits practised by the ancient man in his life are usually handed over to the succeeding generations. These practices have become culture and heritage over time. To know the antiquity of the Tamil culture, the grammar book "Tholkappiyam" and the "Sangam literature" are very helpful. Aatrupadai Literature is one of the famous texts that show us the values of life in nutshell. Therefore, the purpose of this article is to study the supreme culture as portrayed in Aatrupadai literature.*

**Keywords:** Courtesy, Aatrupadai Literature, Hospitality.

## References

[1] Dr. Sethuraman. *Atrupadai Ilakkiyathil Tmilar Valviyal*. New Century Book House (Pvt. Ltd), Ambattur Chennai- 60098.
[2] Dr. Era Kumaran. *Sanga Ilakkiyam Arivom Pattupattu*. Gavin Publishing House, Thanjavur 613006, 2016.
[3] Dr. Sa. Ve. Subramanian. *Pattupattu*. Kovilur Madam, Kovilur, 2003.
[4] Dr. Murugesan. *Pattupattu*. Saratha Patipagam, Chennai - 60014, 2009.
[5] Dr. A. Dakshinamurthy. *Tamilar Nagarigamum Panbadum*. Bharati Press, 2014.
[6] C. Arasappar. *Tamilar Panbadu*. Manickam Offset Printers, Thanjavur, 2001.
[7] Thiruvalluvar. *Thirukkura*l. Saivasiddhanta Book Society, Chennai, 1969.
[8] Ve Muthulakshmi. *Panbattu Sinthanaigal*. Anita Publishing House, Trichy. 2001.
[9] Na. Mu. Venkatasamy Nattar. *Purananuru*. Tirunelveli Ten India Saivasiddhanta Nuopadipuk Kazhagam, Chennai – 600018, 2008.
[10] Na. Mu. Venkatasamy Nattar. *Kalinthogai*. Tirunelveli Ten India Saivasiddhanta Nuopadipuk Kazhagam, Chennai - 600018, 2008.
[11] Na. Velusamy. *Payana Noolgal Vazhi Panbadu*. Erode.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 3, இதழ் - 1, கார்த்திகை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ஆற்றுப்படை இலக்கியத்தில் பண்பாடு

**சு.வெண்ணிலா**, முனைவர் பட்ட ஆய்வாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி, தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-1658-7282
**முனைவர் நா.சிவாஜிகபிலன்**, தலைவர் & இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி, தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-8818-6038
**DOI: DOI: 10.5281/zenodo.10389576**

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகில் பிற மொழிகளில் காணாத அறக்கருத்துக்கள் நிறைந்த அற நூல்களை உடையது நம் தமிழ் மொழி. இம்மேன்மை வாய்ந்த தமிழ் மொழியின் காலத்தை அறுதியிட்டுக் கூற இயலாத அளவுக்கு இலக்கண, இலக்கிய வளங்களை பெற்று திகழ்வது சிறப்பு. பண்பாடு, கலை போன்ற அனைத்து நோக்கிலும் ஈடு இணையற்ற மொழியாக தமிழ் மொழி சிறந்து விளங்குகிறது. சமூகத்தில் ஓர் அங்கமாக இருப்பவன் மனிதன். ஆகவே அவன் பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, பணி, எண்ணங்கள் ஆகியவை அவன் வாழ்கின்ற சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு மனித சமூகத்திற்கும் ஒரு பண்பாடு என்பது உண்டு. மனிதன் தன் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்பட்ட பழக்கங்கள் காலமாற்றத்தால் வழக்கமாக உருவெடுத்தது. இவ்வழக்கமே காலப்போக்கில் பண்பாடாக மாறியது. பண்படுதல் என்பதன் பொருள் சீர்ப்படுத்துதல் செம்மைப்படுத்துதல் ஆகும். 'உயர்ந்தோர் எனப்படுபவர் பண்புடையவரே, ஆவர். தமிழர் பண்பாட்டின் தொன்மை அறிந்து கொள்ள பெரிதும் துணை நிற்பன இலக்கண நூலான தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் ஆகும். எனவே சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் சரி பாதி அளவைப் பெற்றிருக்கும் ஆற்றுப்படை இலக்கியத்தில் இடம்பெறும் பண்பாட்டின் மேன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** பண்பாடு, ஆற்றுப்படை இலக்கியம், விருந்தோம்பல்.

**முன்னுரை**

சங்க காலக் கலைஞர்களின் பண்பாட்டையும், வாழ்வியல் நிலையையும், புரவலர்களின் இரக்க உள்ளத்தையும் ஆற்றுப்படை இலக்கியங்கள் நமக்குத் தெளிவாக்குகின்றன. உலகில் வேறெந்த மொழியிலும் இவ்வகையான பண்பாட்டு இலக்கியம் இல்லை என்றே கூறலாம். மண்ணுலகப் பெருவாழ்வுக்கான பொருளைப் பெறுவதற்காக மட்டுமின்றி வானுலக வாழ்வைப் பெறுவதற்கான அருளைப் பெறவும் ஆற்றுப்படை இலக்கியங்கள் பயன் படுகின்றன.

**பண்பாட்டின் உயரிய சிந்தனை**

பண்பாடு பண்புள்ள மனிதனையும், மனித சமுதாயத்தையும் இயக்கம் கருவியாக அமைந்தது. **பண்பாடு என்பது கண்களால் காணக்கூடியதன்று (பயண நூல்கள் வழிப்பண்பாடு, பக். 21)** என்பது வில்லியம் ஹெவிலாண்டின் கருத்தாகும். பண்பாடு என்பதற்கு சென்னை பல்கலைக்கழகப் பேரகராதி **பிறர் இயல்பறிந்து நடக்கும் நற்குணம் (பண்பாட்டுச் சிந்தனைகள், பக். 12)** என்று பொருள் கூறியுள்ளது. பண்பாடு என்பது அகம் சார்ந்தது. உயிர் போல் இயங்கும் ஆற்றல் கொண்டது. உயர்ந்த நோக்கமுடையது. 'பண்படு' என்ற வேர்ச்சொல்லில் இருந்தே பண்பாடு தழைத்தது. ஆற்றுப்படை இலக்கியங்களில் புலவர்கள் உயர்ந்த பண்புடையவர்களாகவே போற்றப்பட்டுள்ளனர். வள்ளல்கள் மணமகிழ்ந்து கொடுக்கும் பொருளைப் பெற்று தானும் அனுபவித்து மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்து **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் (குறள் - 322)** என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க பண்பாடுசிறக்க வாழ்ந்துள்ளனர். மனிதனின் உயர்ந்த பண்புகளில் ஒன்று பிறரை வழிநடத்தி வாழ்க்கையில் முன்னேற செய்வது ஆகும். அப்பண்புகளின் மிளிர்வே ஆற்றுப்படை இலக்கியங்கள். இவ்வாறு மக்கள் நல்வாழ்விற்காக வேண்டப்பெறும் பண்பாட்டினை இலக்கியத்தில் காண முடிகிறது.

பறம்பு மலைக்குத் தலைவனாக விளங்குபவன் பாரி. அவன்வேளிர் குலத்திற்குத் தலைவன். மூன்று வேந்தர்களும் ஒருங்கே வந்து முற்றுகையிட்டாலும் வெற்றியைத் தனதாக்கிக் கொள்ளும் வலிமை படைத்தவன் பாரி. கபிலரின் உற்ற நண்பன். முல்லைக் கொடிகள் நிறைந்த மலையில் முல்லைக் கொடி படரக் கிளைகள் இன்றித் தவித்ததைக் கண்டு பாரி ஏறி வந்த தேரினை அதன் அருகில் வைத்து முல்லைக்கொடி படர வழிவகைச் செய்தான்.இக் கருத்தின் மூலம் உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் தம்முயிர் போல் போற்றும் உயரிய பண்பாடு புலனாகிறது என்பதனை,

**சுரும்பு உண நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்**
**சிறுவீ முல்லைக்குப்பெருந்தேர் நல்கிய**
**பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்**
**பறம்பின் கோமான் பாரியும் (சிறுபாணாற்றுப்படை, பா. 87-91)**

எனும் சிறுபாணாற்றுப்படை வரிகள் மூலம் அறிய முடிகிறது. இப்பாடலடிகளில் 'சிறு முல்லை''பெருந்தேர்' என முரண் வைத்து வள்ளலின் சிறப்பைப் புலவர் கூறியிருப்பதிலிருந்து எவ்வுயிரும் தம்முயிர் போல் போற்றும் பண்பு மேலோங்குவதைக் காணலாம். மக்களாகப் படைக்கப்பட்ட நாம் அறிவுக் கூர்மை மிகுதியே பெற்றிருப்பினும் பிறப்புக்குரிய பண்பினை பெறவில்லை எனில் அவர் மரம் போன்றவர் ஆவார். எனவே, அறிவினும் சிறந்தது பண்பாடே என்பதனை,

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர் (குறள் - 997)**

என உலகப் பொதுமறையாம் வள்ளுவம் நமக்குப் பண்பாட்டின் உயரிய சிந்தனையை எடுத்தியம்புகிறது. இரப்போர் தானே என்று தன்னை நாடி வருபவர்களை எண்ணாது வள்ளல்கள் அவர்களை இன்முகத்துடன் இனிய மொழியைபபேசி வரவேற்றுத் திறனறிந்து பரிசுகளை வழங்கியுள்ளனர். என்பதனை, **ஈர நன்மொழி இரவலர்க் கீந்த (சிறுபாணாற்றுப்படை, பா. 93)** எனும் சிறுபாணாற்றுப்படை வரிகள் மூலம் அறிய முடிகிறது. இதன் மூலம் தன்னை நம்பி வருவோருக்கு அளிக்கும் பொருட்களைக் காட்டிலும் அகம் மலர்ந்து பேசும் இனிய மொழியே சிறந்த பண்பாடாகும் என்பது புலனாகிறது. மேலும் செய்தியினை வலியுறுத்தும் பொருட்டு, **செல்வனே இடு வறிங்கனே பெறாதே, உழைத்துப் பெறு (தமிழர் பண்பாடு, பக். 172)** என்பதிலிருந்து வள்ளல்கள் கொடுத்தாலும் அதனை உழைக்காது பெற்ற விடாதே உழைத்துப் பெறு என்பதே இரவலர்களின் நோக்கமாக இருந்துள்ளது. ஏனெனில் 'உழைப்பே உயர்வு தரும்' இவற்றை நோக்கும் போது இரவலர்கள் புரவலர்கள் இருவருமே சிறந்த பண்போடு வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

**வறுமையிலும் பண்பாடு போற்றல்**

பொருநன் ஒருவனுக்குத் தன் குடும்பத்தையும், சுற்றத்தாரையும் காப்பாற்ற இயலாத கொடுமையான வறுமை ஆழ்ந்தது. அப்பொருநன் அனைவரையும் அழைத்துக் கொண்டு கொடையில் சிறந்த வள்ளலை நாடிச் செல்கின்றான். அவ்வழியில் அவன் மற்றொரு பொருநனைக் காண்கின்றான். அவர்களின் நிலை அறிந்த பொருநன் வருத்தம் அடைந்து வறுமையைப் போக்க வழிப்படுத்துகிறான். என்பதனை,

**ஆடுபசி உழந்தநின் இரும்போர் ஒக்கலொடு**
**நீடுபசி ஓராஅல் வேண்டி, நீடு இன்று (பொருநராற்றுப்படை, பா. 61, 62)**

*பொருநராற்றுப்படை* வரிகள் மூலம் புலனாகிறது. தான் வறுமை நீங்கி தான் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெற வேண்டும் என்ற உயர்ந்த பண்பாடு அக்கால மக்களிடையே இருந்துள்ளது என்பது மக்களோடு மக்களாக வாழ்ந்த புலவர்களின் இலக்கியங்கள் மூலம் காண முடிகிறது. சிறுபாணாற்றுப்படையில் பாணனின் வறுமையின் கொடுமையானது திறம்படக் காட்சியாக்கப்பட்டுள்ளது. அவனது வீடு செல்லரித்த சுவரும், சிதைந்து போன கூறையுமாக உள்ளது. சுவர் மற்றும் கூரையின் நிலை இவ்வாறு என்றால் வீட்டின் சமையலறையோ புழுதி படிந்துக் காணப்படுகிறது. அதன் மீது காளான்கள் வளர்ந்துள்ளன. நாய்க்குட்டிகளை ஈன்றுள்ளது. பசியிலே வாடும் நாய் தன் குட்டிகளுக்குப் பசியை ஆற்ற முடியாத நிலை. அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் நிலையோ கொடிது. அவர்கள் உணவு உண்டு வெகு நாட்களாகிவிட்டது. பசி துன்பம் வாட்டியது உப்பிற்கு கூட வழியில்லை. நம் உணவுப் பொருள்களில் மிகவும் இன்றியமையாத பொருள் உப்பு. "உப்பில்லா பண்டம் குப்பையிலே" என்பது மூத்தோர் சொல்லாகும். உப்பினை விற்பவர்கள் உமணர்கள் எனப்பட்டனர். அவர்களிடம் உப்பைப் பெற வேண்டுமானால் ஏதேனும் ஒரு பொருளை

கொடுத்தால் தான் பண்டமாற்றாக உப்பைப் பெற முடியும். ஆனால் பாணனிடம் எவ்வித பொருளும் இல்லை. ஆகவே பாணனின் மனைவி குப்பையில் வளர்ந்த வேளைக் கீரையைத் தன் நகங்களால் கிள்ளி வந்து அதனைச் சமைப்பதற்குப் பிறரிடம் இரந்துச் சென்று உப்பை பெறாமல் அக்கீரையை உப்பில்லாமல் சமைத்துத் தன் சுற்றத்தாருடன் உண்டனர். அதனைப் பிறர் கண்டால் நகைக்கு உள்ளாகும் என்று கதவடைத்து உண்டனர். இத்தகைய வறுமையில் உலர்ந்த போதும் பிறரிடம் இருந்து செல்லாது பண்பாட்டில் உயர்ந்து நிற்கிறது பாணனின் குடும்பம். இதனை,

**ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்**
**வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைந்த**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணி கடையடைத்து (சிறுபாணாற்றுப்படை, பா. 135-138)**

எனும் *சிறுபாணாற்றுப்படை* பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. தமிழரின் செம்மையைக் காண்பதற்கு இது சிறந்த சான்றாகும். பாணன் வறுமை எனும் கொடுமை நீங்கி வளம் பெற்றுத் திரும்பும் போது தன்னைப் போன்று வறுமையுறும் சிறுபாணனைக் கண்டு பெருஞ்செல்வத்தைப் பெற ஆற்றுப்படுத்துவதில் இருந்து சிறந்த மானிடப் பண்பு மேலோங்கி நிற்கிறது. பாணனின் வாழ்க்கை வறுமை நிறைந்தது எனினும், அவர்களின் சிந்தனை வளமானது. சங்க காலத்தில் வறுமையும், வறுமையிலும் தன்னிலை தாழாப் பண்பும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தும் பொருட்டு,

**விருந்துகண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை**
**பொறிபுணர் உடம்பில் தோன்றி என்**
**அறிவுகெட நின்ற நல்கூர் மையே (புறநானூறு, பா. 266:11-13)**

எனும் இப்பாடலின் வழி வறுமையின் தன்மையைப் பெருங்குன்றூர்க்கிழார் மன்னனிடம் எடுத்துரைக்கும் நிலையினைத் தமிழர் பண்பாடு என்பது, வீட்டிற்கு வரும் விருந்தினரைக் முகம் மலர்வோடு அழைத்து விருந்து அளிப்பதே ஆகும். ஆனால் இவரின் வறுமை என்பது விருந்தினரைக் கண்டதும் ஒளிந்து கொள்ளும் அளவிற்கு வறுமை. இந்த வறுமையானது அவர் உடம்பில் தோன்றி அறிவை மயக்கமடையச் செய்கிறது. எனவே, சோழனிடம் இவ்வறுமையை உடனே போக்க வேண்டும் என்று வேண்டுகிறார். இதன் மூலம் வறுமை நிலையிலும் தன்னை நினைத்துக் கவலை கொள்ளாது விருந்தினரை உபசரிக்கும் உயரிய பண்பாடு சங்க கால மக்களிடையே நிலவியுள்ளது என்பதனைப், புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது. பாணனின் வறுமை இசையால் ஆற்றப்பட்டது.

**பழுமரம் தேரும் பறவை போலக்**
**கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண! (பெரும்பாணாற்றுப்படை, பா. 20-22)**

என்ற ,பெரும்பாணாற்றுப்படை வரிகள் மூலம் பாணனின் உடம்பு புல்லின் துரும்பு போல இளைத்துள்ளது. வறுமையின் துன்பத்தால் பாணன் தன் சுற்றத்தோடு கால்போன பக்கமெல்லாம் திரிகின்றான். அவன் வாயில் புலவு நாற்றம் வீசுகிறது. உண்ணஉணவு இல்லாத காரணத்தால் பல் கூடதுலக்காத நிலை. பழுத்த மரத்தைத் தேடிச் செல்லும் பறவையைப் போல பாணனின் வறுமை நிலை காட்சியாக்கப்பட்டுள்ளது. இதனை நோக்கும் போது வறுமையிலும், வளமையிலும் பாணனின் 'ஒற்றுமையே வலிமை' என்ற சிறந்த பண்பாகப் போற்றப்படுகிறது.

**புரவலர்களின் பண்பாட்டுச் செம்மை**

இரவலர்களின் வறுமை நிலையைப் புரவலர்களும் உற்று நோக்கினர். அவர்களின் வறுமை நிலையை தனக்கு உற்றதுபோல எண்ணினர்.

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை (குறள் - 315)**

எனும் உலகப் பொதுமறையான குறளின் வாக்கிற்கிணங்க இரக்கப் பார்வைக் கொண்டு எலும்புகளையும் குளிரச் செய்யுமாறு அன்பு செலுத்தினர். பாணனின் ஆடை துணியால் நெய்தது போல் அல்லாமல் நூலால் தைத்தே செய்தது போல் இருந்தது. அந்த ஈரும் பேனும் தாங்கிய அழுக்காடையை அகற்றி நுண்ணிய இழைகளால் நெய்யப்பட்ட பட்டாடைகளைக் கொடுத்தனர். அதன் பின்னே, அவர்களுடன் பேசத் தொடங்கினர். காரணம் அழுக்கான ஆடை அவர்களின் எண்ணத்தில் தாழ்வை உண்டாக்கும் எனக் கருதித் தனக்குச் சமமாக மதித்துப் போற்றும் உயரிய பண்பு புரவலர்களிடம் இயல்பாகவே இருந்துள்ளது. அதோடு மட்டும் அல்லாது விருந்தோம்பல் நிலையிலும் சிறப்பாகவே உபசரித்துள்ளனர். பரிசுப் பொருட்களை அளித்துப் பிரிய மனமில்லாமல் பிரிந்து காலால் ஏழடிகள் பின் சென்று அவர்களை வழி அனுப்பினார்கள். என்பதனை,

**பருகு அன்ன அருகா நோக்கமோடு**
**உருகுபவை போல்என்பு குளிர் கொளீஇ**
**ஈரும் பேனும் இருந்து இறைகூடி**
**வேரொடு நனைந்து, வேற்றுழை நுழைந்த**
**துன்னற் சிதாஅர் துவர நீக்கி,**
**நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுரி அன்ன அறுவை நல்கி (பொருநராற்றுப்படை, பா. 77 - 83)**

என்னும் *பொருநராற்றுப்படை* வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேலும், தம்மை நாடி வருபவர்களின் களைப்பைப் போக்குவதற்காக நாம் இன்று வந்தவர்களுக்குத் தண்ணீர் கொடுத்துப் பின்பு தேவையான உணவைக் கொடுப்பது போன்று சங்க காலத்தில் தம்மை நாடி

வருபவர்களுக்கு முதலில் மயக்கம் தராத, களைப்பைப் போக்கும் தேறலை ஊற்றித் தந்துள்ளனர் .என்பதனை,

**போக்கு இல் பொங்கலம் நிறைய, பல்கால்**
**வாக்குபு தரத்தர வருத்தம் வீட**
**ஆரஉண்டு, பேர் அஞர் போக்கி (பொருநராற்றுப்படை, பா. 86 - 88)**

என்று பொருநராற்றுப்படையில் தன் வீடு வந்தவர்களுக்கு முதலில் களைப்பைப் போக்க வேண்டும் என்னும் உயரிய சிந்தனை போற்றப்பட்டுள்ளமை அறிய முடிகிறது. நன்னன் என்ற மன்னன் தனக்கென்று வரையறுக்கப்பட்ட நாள்கள் அனைத்துமே புகழோடு அமைய வேண்டும் என்று விருப்பம் கொண்டவன். அவன் உள்ளமோ பரந்து கிடக்கும் வானம் போன்றது. தன்னை நாடி வருபவர்களை உவந்த உள்ளமொடு முகம் மலர வரவேற்று உடுத்த ஆடையும், உண்ண கறிச்சோறும் விருந்தாக அளித்தான். பல நாள் தங்கினாலும் விருந்தானது தலை நாள் போன்றே உபசரிக்கப்பட்டது. என்பதனை,

**உவந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி**
**…தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து**
**பலநாள் நிற்பினும் பெருகுவீர் (மலைபடுகடாம், பா. 560, 565, 566)**

என்னும் *மலைபடுகடாம்* வரிகள் மூலம் அறிய முடிகிறது. இல்லறத்தின் சீறிய பண்பாகத் திகழ்வது விருந்தோம்பல் ஆகும். அதன் மேன்மை கருதி வள்ளுவரும் அதற்கென ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். விருந்தோம்புபவனிடம் செல்வம் நாளுக்கு நாள் வளரும். தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் விருந்தோம்பல் பண்பாடு தமிழரின் அடிப்படை பண்பாடாக திகழ்கிறது. அதுவே, வாழ்க்கைக்கு இன்றியமையா பண்பான அன்பையும் ,அறிவையும் வளர்க்கும் வாயிலாக விளங்குகிறது. இப்பண்பாடு ஆற்றுப்படையில் புரவலர்களிடையே இயல்பாகவே அமைந்திருப்பது சிறப்பிற்குரியதாகும். புரவலர்கள் கொடுப்பதில் மட்டுமின்றி பெரியோரைக் கண்டால் கைகுவித்து வணங்கும் சிறந்த பண்பையும் பெற்றிருந்தனர். என்பதனை, **முதுவோர்க்கு முகிழ்த்த கையினை (சிறுபாணாற்றுப்படை, பா. 231)** என்ற வரிகள் மூலம் தன்னிலும் மூத்தாரைக் காணும் போது பணிதல் வேண்டும் என்ற உயரிய சிந்தனை தமிழர்களிடையே காணப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இலக்கியமே மக்களின் வாழ்வியலாக விளங்குகின்றது.பண்பாடு உடைய வாழ்க்கை பலருக்கும் வழிகாட்டியாக அமைவது போல் நல்ல பண்புடைய இலக்கியங்கள் படிப்பவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அவர்களைப் பண்படுத்த வேண்டும். அத்தகைய நெறிகளை கொண்டதே ஆற்றுப்படை இலக்கியங்கள். இவ்வகை இலக்கியங்கள் பண்பாட்டின் பெட்டகமாகவும் வாழ்வியல் சிந்தனைகள் நிரம்பியனவாகவும் திகழ்கின்றன. இவ் விலக்கியங்கள் காலம் கடந்தும் வாழும். மனித வாழ்வில் இருந்து தோன்றிய இலக்கியங்கள்

வாழ்க்கை முறையயைப் பிரதிபலிக்கின்றன. மண்ணில் நல்ல வண்ணம் வாழ இலக்கியங்கள் துணை புரிகின்றன. நினைவுக்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றி பல சூழ்நிலைகளுக்கிடையில் உறழ்ந்தும், பிறழ்ந்தும், மாற்றங்களைப் பெற்றும் சமுதாய வாழ்வை மேன்மை அடையப் பண்பாடு வழி கோலியுள்ளது என்பதை அறிய முடிகிறது. இதுதான் என்று அறிதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் பண்பாட்டால் உலகம் சிறப்படைகிறது என்பதை மறுக்க இயலாது .ஆகவே, சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை தமிழர் தம் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தியும் நிலை நிறுத்தியும் வருவன பண்டையத் தமிழ் இலக்கியங்களே ஆகும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

**துணைநூற்பட்டியல்**

[1] முனைவர் பி. சேதுராமன்.*ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்), சென்னை- 60098.
[2] முனைவர் இரெ. குமரன். *சங்கஇலக்கியம் அறிவோம் பத்துப்பாட்டு.* கவின் பதிப்பகம், தஞ்சாவூர் 613006, 2016.
[3] முனைவர் ச. வே. சுப்பிரமணியன். *பத்துப்பாட்டு.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.
[4] முனைவர் கதி. முருகேசன். *பத்துப்பாட்டு.* சாரதாபதிப்பகம், சென்னை, 2009.
[5] முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்.* யாழ் வெளியீடு, பாரதி அச்சகம், சென்னை, 2014.
[6] சி. அரசப்பனார். *தமிழர்பண்பாடு.* மாணிக்கம் ஆப்செட் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர், 2001.
[7] திருவள்ளுவர். *திருக்குறள்.* சைவசித்தாந்த நூல் கழகம்,சென்னை, 1969.
[8] வே முத்துலட்சுமி. *பண்பாட்டுச் சிந்தனைகள்.* அனிதா பதிப்பகம், திருச்சி. பதிப்பு-2001.
[9] நா.மு.வேங்கடசாமி நாட்டார். *புறநானூறு.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்லிட், சென்னை – 600018, 2008.
[10] நா.மு.வேங்கடசாமி நாட்டார். *கலித்தொகை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை - 600018, 2008.
[11] நா. வேலுசாமி. *பயண நூல்கள் வழிப்பண்பாடு.* (ஆசிய நாடுகள் அளவில்), ஈரோடு.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.